


admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253


# நமது தினகனி

NAMADHU DHINA KANI www.dhinakani.com

காலை நாளிதழ்




| Vol: 03 | Issue: 1 | 4 Pages | 1.8.2025 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| லர்: 03 | இதழ்: 1 | 4 பக்கங்கள் | 1.8.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும்**

**மருளானாம் மாணாப் பிறப்பு**

**விளக்கம்:** மெய்ப்பொருள் அல்லாதவைகளை மெய்ப்பொருள் என்று தவறாக உணர்கின்ற மயக்க உணர்வால் சிறப்பில்லாத துன்பப் பிறவி உண்டாகும்.

## யுபிஐயில் பணம் அனுப்ப பின் நம்பர் தேவையில்லை: விரைவில் வருகிறது சூப்பர் வசதி




பயனர்களின் வசதியைக் கருத்தில் கொண்டு யுபிஐ சேவையை அறிமுகப்படுத்தியதேசியபேமென்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா என்ற அரசு நிறுவனம் பல்வேறு மேம்படுத்தல்களைச் செய்து வருகிறது.

யுபிஐ எனப்படும் டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை சேவை இந்தியாவில் மிகவும் பிரபலமாகி உள்ளது. கூகுள் பே, போன் பே போன்ற செயலிகள் மூலமாகவும் இந்த யுபிஐ சேவையைப் பயன்படுத்தலாம். வங்கிக் கணக்குடன் இணைக்கப்படும் யுபிஐ ஐடி மூலமாக சில வினாடிகளில் பணத்தைச் செலுத்திவிடலாம்.

சிறிய பெட்டிக்கடை முதல் பெரிய வணிக வளாகம் வரை யுபிஐ வசதி இருப்பதால், தற்போது மக்களிடையே யுபிஐ பயன்பாடு அதிகரித்து வருகிறது. பயனர்களின் வசதியைக் கருத்தில் கொண்டு யுபிஐ சேவையை அறிமுகப்படுத்திய தேசிய பேமென்ட்ஸ் கார்ப்பரேஷன் ஆப் இந்தியா என்ற அரசு நிறுவனம் பல்வேறு மேம்படுத்தல்களைச் செய்து வருகிறது.

அந்த வகையில், விரைவில் பின் நம்பர் பதிவு செய்யாமல் கைரேகை மூலமே பணம் அனுப்பும் வசதி கொண்டுவரப்படும் என்று தகவல் வெளியாகியுள்ளது.ஒருவருக்கு பணம் அனுப்பும்போது, 'பின் நம்பர்' எனப்படும் நான்கு இலக்க அல்லது ஆறு இலக்க ரகசிய எண்ணைப் பதிவு செய்ய வேண்டும். இந்த ரகசிய எண்ணுக்குப் பதிலாக டிஜிட்டல் முறையில் கைரேகையைப் பதிவு செய்தும், முக அடையாளத்தைப் பதிவு செய்தும் பணத்தை அனுப்பும் வகையில் மேம்படுத்தப்படலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது. எனினும், இது தொடர்பான இறுதி முடிவு இன்னும் எட்டப்படவில்லை. அதிகாரிகள் ஆலோசனை நடத்தி வரும் நிலையில், சாதக பாதகங்களை ஆய்வு செய்த பிறகே இந்த வசதியை அறிமுகப்படுத்துவது குறித்து முடிவு செய்யப்படும் என்று கூறப்படுகிறது.

## தொடர்ந்து முடங்கும் நாடாளுமன்றம்: எதிர்க்கட்சிகள் கடும் அமளியால் இரு அவைகளும் ஒத்திவைப்பு



புதுடெல்லி, ஆக. 1

நாடாளுமன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடர் கடந்த 21ந் தேதி தொடங்கியது. பஹல்காம் பயங்கரவாத தாக்குதல், ஆபரேஷன் சிந்தூர் விவகாரம் உள்ளிட்ட பிரச்சினைகளை விவாதிக்க வேண்டும் என்று கோரி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் நாடாளுமன்றத்தில்கடும்அமளியில் ஈடுபட்டன. இதனால் மக்களவையும், மாநிலங்களவையும் முடங்கின. இதையடுத்து ஆபரேஷன் சிந்தூர் பற்றி விவாதிக்க மத்திய அரசு முன்வந்தது.

இந்நிலையில் இன்று (ஜூலை 31) மக்களவை கூடியதும் அமெரிக்க வரி விதிப்பு, வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக விவாதிக்கக் கோரி எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர்.

மக்களவை சபாநாயகர் ஓம்.பிர்லா பலமுறை எச்சரித்தும் எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர். போராட்டம் நடத்தும் உறுப்பினர்கள் கோஷங்களை எழுப்புவதை நிறுத்திவிட்டு தங்கள் இருக்கைகளுக்குத் திரும்ப வேண்டும். நீங்கள் (போராட்டம் நடத்தும் உறுப்பினர்கள்) பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க விரும்பவில்லையா?என்று அவர் கூறினார், மேலும் மக்கள் உங்களை சபையில் கோஷமிடத்தான் தேர்ந்தெடுத்தார்களா என்று கேட்டார். சபை பிரச்சினைகளைப் பற்றி விவாதிப்பதற்கானது, உறுப்பினர்களின் நடத்தை பொருத்தமானதல்ல என்று கூறி அவையை பிற்பகல் 2 மணி வரை சபாநாயகர் ஓம்.பிர்லா ஒத்திவைத்தார்.

அதேபோல், எதிர்க்கட்சிகள் அமளி காரணமாக மாநிலங்களவையும் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. நாடாளுமன்றம் தொடர்ந்து முடங்கி வருகிறது. முன்னதாக அவை கூடியதும் இஸ்ரோ மற்றும் நாசா இணைந்துஉருவாக்கியபூமிகண்காணிப்புசெயற்கைக்கோளைநிலைநிறுத்திய ஜிஎஸ்எல்வி ராக்கெட்டை வெற்றிகரமாக ஏவியதற்காக விஞ்ஞானிகளை நாடாளுமன்றம் பாராட்டியது.

## மாலேகான் குண்டுவெடிப்பு: 7 பேரும் விடுதலை

மும்பை, ஆக. 1

நாசிக் மாவட்டத்தில் அமைந்துள்ள மாலேகாவ் நகரில் உள்ள ஒரு மசூதி அருகே 2008ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29ந் தேதி அன்று மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டு இருந்த வெடிகுண்டு வெடித்தது. இதில் 6 பேர் கொல்லப்பட்டதுடன், 100க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

வழக்கு விசாரணையின்போது என்.ஐ.ஏ. தனது இறுதி வாதத்தில், "முஸ்லிம் மக்கள் தொகை அதிகம் கொண்ட நகரமான மாலேகாவில் நடந்த குண்டுவெடிப்பு, முஸ்லிம் சமூகத்தின் ஒரு பகுதியை பயமுறுத்தவும், வகுப்புவாத பதற்றத்தை உருவாக்கவும், மாநிலத்தின் பாதுகாப்பை அச்சுறுத்தவும் சதிகாரர்களால் திட்டமிடப்பட்டது. குற்றம் சாட்டப்பட்டவர்கள் இந்த பெரிய சதியில் நேரடியாக ஈடுபட்டுள்ளனர். குண்டுவெடிப்புக்கு முக்கிய பங்கு வகித்துள்ளனர். குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு எதிராக தகுந்த சாட்சியங்கள் இருப்பதை கருத்தில் கொண்டு அவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்கவேண்டும்" என தெரிவித்து இருந்தனர்.

இந்தநிலையில், பயங்கரவாதத்திற்கு மதம் இல்லை, ஏனென்றால் எந்த மதமும் வன்முறையை ஆதரிக்க முடியாது. வெறும் கருத்து மற்றும் தார்மீக ஆதாரங்களை வைத்து நீதிமன்றம் யாரையும் தண்டிக்க முடியாது; உறுதியான ஆதாரங்கள் இருக்க வேண்டும். குண்டுவெடிப்புக்கான சதித்திட்டம் தீட்டியதற்கான எந்த ஆதாரமும் இல்லை. ஸ்ரீகாந்த் புரோகித் ஆர்டிஎக்ஸ் கொண்டு வந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை. குண்டு இருந்ததாக கூறப்பட்ட மோட்டார் சைக்கிள் சாத்விக்கு சொந்தமானது என ஆதாரம் இல்லை.குண்டுவெடிப்பில்காயமடைந்தவர்களின்மருத்துவசான்றிதழ்களில் மோசடி இருப்பதாக தெரிகிறது.

மாலேகானில் மோட்டார் சைக்கிளில் வெடிகுண்டு வைக்கப்பட்டதை அரசுத்தரப்பு நிரூபிக்கவில்லை என கூறி பாஜக முன்னாள் எம்.பி. பிரக்யா சிங் தாக்கூர் உள்பட 7 பேரையும் விடுவிக்க தேசிய புலனாய்வு முகமை சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 17 ஆண்டுகால வழக்கில் நீதிமன்றம் இந்த தீர்ப்பை அளித்துள்ளது.

மேலும் குண்டுவெடிப்பில் பலியான ஆறு பேரின் குடும்பங்களுக்கும் தலா ரூ.2 லட்சம் வழங்கப்படும், காயமடைந்த அனைவருக்கும் ரூ.50,000 இழப்பீடாக வழங்கப்படும் என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# 10 நாட்களுக்கு பின்... தலைமை செயலகத்தில் பணிகளை தொடங்கினார் மு.க.ஸ்டாலின்



சென்னை, ஆக 1

கடந்த சில தினங்களுக்கு முன்பு முதல்அமைச்சர் மு க ஸ்டாலின் உடல்நலம் பாதிக்கப்பட்ட நிலையில் சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள அப்பல்லோ ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். சுமார் ஒரு வார காலம் அங்கு தங்கி சிகிச்சை பெற்ற அவர் அங்கிருந்தபடியே அரசு அலுவல்களை கவனித்து வந்தார். உடல் நலம் தேறிய நிலையில் டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட அவர் வீட்டிலேயே ஓய்வெடுத்து வந்தார்.

இந்த நிலையில் 10 நாட்களுக்குப் பிறகு முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின்இன்றுதலைமைச் செயலகம் வந்தார். காலை 10.15 மணியளவில் முதல்அமைச்சர் அலுவலக நுழைவாயில் அருகில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்று, 202526 ஆம் கல்வி ஆண்டில் புகழ் பெற்ற உயர்கல்வி நிறுவனங்களான இந்திய தொழில்நுட்ப கழகம், ஒன்றிய பல்கலைக் கழகங்கள், தேசிய பேஷன் தொழில்நுட்ப நிறுவனம், தேசிய சட்டப் பல்கலைக்கழகம், *Miranda House, University of Delhi* போன்றவற்றில்சேர்க்கை பெற்ற 135 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார்.

இதனை தொடர்ந்து காவல் துறை சார்பில் 27 கோடியே 59 லட்சம் ரூபாய் செலவிலும், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் துறை சார்பில் 13.54 கோடி ரூபாய் செலவிலும், சிறைகள் மற்றும் சீர்திருத்தப் பணிகள் துறை சார்பில் 60 லட்சம் ரூபாய் செலவிலும் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மற்றும் தடய அறிவியல் துறை சார்பில் 3 கோடியே 74 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள போதை மருந்து ஆய்வுப் பிரிவுகள் ஆகியவற்றை திறந்து வைத்தார்.

மேலும், 229.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள மதுரை மத்திய சிறைச்சாலை கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

தொடர்ந்து மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை சார்பில் தமிழ்நாடு அரசுப் பணியாளர்தேர்வாணையம் மூலமாக தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் தட்டச்சர் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 39 நபர்களுக்கும், தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தில் கருணை அடிப்படையில் திருமதி கிருஷ்ண வேனி என்பவருக்கும் பணி நியமன ஆணையினையும் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள், காவல் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

# திருப்பூர் பள்ளியில் 1ம் வகுப்பு மாணவிக்கு பாலியல் தொல்லை; வடமாநில வாலிபர் கைது; பெற்றோர் போராட்டம்!

திருப்பூரில் ஒரு அதிர்ச்சியான சம்பவம் நடந்துள்ளது. K.V.R நகரில் உள்ள தனியார் மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப் பள்ளியில் ஒரு மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுக்கப்பட்டுள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

தி.மு.க சுற்றுச்சூழல் பிரிவு மாநில துணைச்செயலாளருக்கு சொந்தமான இந்த பள்ளியில், முதலாம் வகுப்பு படிக்கும் சிறுமிக்கு அஸ்ஸாம் மாநிலத்தை சேர்ந்த ஜெய்என்பவர்பாலியல்தொல்லை கொடுத்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த பெற்றோர்கள் பள்ளியை முற்றுகையிட்டு சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று, பள்ளிக்கு சென்ற முதலாம் வகுப்பு சிறுமி கழிவறைக்கு சென்றுள்ளார். அப்போது, துப்புரவு பணியில் ஈடுபட்டிருந்த ஜெய் என்ற இளைஞர் அந்த சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்துள்ளார். இந்த சம்பவம் தொடர்பாக பெற்றோர் புகார் அளித்ததை தொடர்ந்து, இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த செய்தி வெளியானதும், இன்று காலை பெற்றோர்கள் பள்ளிக்கு வந்தனர். அவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு பள்ளியில் பாதுகாப்பு இல்லை என்று கூறி பள்ளி நிர்வாகத்தினருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். "தங்கள் குழந்தைகளுக்கு பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்" என்று அவர்கள் கோரிக்கை வைத்தனர். பள்ளி நிர்வாகம் சரியான பதில் அளிக்காததால், பெற்றோர்கள் ஆத்திரமடைந்து பள்ளி முன்பு சாலை மறியலில் ஈடுபட்டனர்.

K.V.R நகர்காவல் நிலைய போலீசார் விரைந்து வந்து பெற்றோர்களை கலைந்து செல்லும்படி கூறினர். ஆனால், பள்ளி நிர்வாகம் அலட்சியமாக இருப்பதாக பெற்றோர்கள் குற்றம் சாட்டினர். "தங்களது குழந்தைகளுக்கு பாதுகாப்பு வேண்டும்" என்ற கோரிக்கையை வலியுறுத்தி 300க்கும் மேற்பட்ட பெற்றோர்கள்சாலையில்அமர்ந்து போராட்டம் நடத்தினர். இதனால், குழந்தைகளை பள்ளிக்கு அழைத்து வந்த பெற்றோர்கள், குழந்தைகளை திருப்பி அழைத்துச் சென்றனர்.

இந்த போராட்டத்தில்பாரதிய ஜனதா கட்சியினரும் கலந்து கொண்டனர். அவர்கள் பள்ளி மாணவிகளின் பாதுகாப்பை



உறுதி செய்ய வேண்டும் என்று வலியுறுத்தினர். "பள்ளி மாணவிகள் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்" என்பது அவர்களின் முக்கிய கோரிக்கையாக இருந்தது. இந்த சம்பவம் திருப்பூரில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

நீண்ட நேரமாகியும் அவர்கள் கலைந்து செல்ல மறுத்தனர். இது தொடர்பாக போலீசார் உயர் அதிகாரிகள் என அனைவரும் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். ஆனால்அவர்கள்கலைந்துசெல்ல மறுத்ததால் போலீசார் அத்துமீறி போராட்டம் நடத்தியதற்காக பெற்றோர்கள் உள்பட அங்கு போராட்டம் நடத்திய அனைவரையும் கைது செய்தனர். இந்த சம்பவம் திருப்பூர் மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

ஆசிரியர் பற்றிகணபதி சுப்பிரமணியன் கணபதி சுப்பிரமணியன் சமயம் செய்திகளில் உதவி செய்தி ஆசிரியராக உள்ளார். அவருக்கு பத்திரிகைத் துறையில் 7 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் உள்ளது. அவர் 2015 ஆம் ஆண்டு தினத்தந்தி பத்திரிகையில் தனது பத்திரிகை வாழ்க்கையைத் தொடங்கினார். ஆரம்பத்தில் ப்ரூப் ரீடிங் வேலையில் இருந்தவர் அதன்பின்னர் சப் எடிட்டராக பணியை தொடர்ந்தார். அங்கு சினிமா, அரசியல், விளையாட்டு போன்ற செய்திகளையும், தேசிய, உலக செய்திகளை மொழிப்பெயர்த்தும் வழங்கி வந்தார். இதன் பின்னர் 2022ம் ஆண்டு சமயம் தமிழ் இணையத்தளத்தில் டிஜிட்டல் கண்டெண்ட் புரோடியூசராக பணியை தொடங்கினார். அங்கு தற்போது மாவட்ட செய்திகள் பிரிவில் சிறப்பு உட்கட்டமைப்பு செய்திகள், சுற்றுலா தொடர்பான செய்திகளை வழங்கி வருகிறார்.






# குப்பை வண்டியில் வாக்காளர் அட்டைகள்

கடலூர், ஆக 1

கடலூர் மாநகராட்சி 45 வார்டு பகுதிகள் கொண்ட நிலையில் நான்கு மண்டலங்களாக செயல்படுகிறது. இதில் கடலூர் மஞ்சக்குப்பம் 3வது பிரிவு அலுவலகத்திற்கு நேற்று காலை குப்பைகளை சேகரிப்பதற்காக துப்புரவு பணியாளர் காமாட்சி (38) என்பவர் பேட்டரி வாகனத்தை எடுத்துச் செல்வதற்காக வந்துள்ளார்.

அப்போது வாகனத்தின் குப்பை கொட்டும் இடத்தில் கள்ளக்குறிச்சி மாவட்டத்தை சேர்ந்தவர்களின் வாக்காளர் அடையாள அட்டைகள், தேர்தலுக்கு அலுவலர்கள் பயன்படுத்தப்படும் பொருட்களாகமை,



பேட்ச் உள்ளிட்டவை கிடந்தது. தகவலறிந்து வந்த தாசில்தார் மகேஷ், வருவாய் ஆய்வாளர் வைத்தியநாதன் குப்பை வண்டியில் இருந்த தேர்தல் அடையாள அட்டைகள் மற்றும் பொருட்களை பறிமுதல் செய்தனர். இதுகுறித்து அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர்.

# அப்துல் கலாம் 10ம் ஆண்டு நினைவு நாள்: சிறந்த ஆசிரியருக்கு விருது

அப்துல் கலாம் 10ம் ஆண்டு நினைவு நாள்: சிறந்த ஆசிரியருக்கு விருது வழங்கப்பட்டது

ராமேஸ்வரம்: கடந்த ஞாயிற்றுக்கிழமை (27.07.2025) அன்று ராமேஸ்வரத்தில் காஞ்சி முத்தமிழ் மையம் சார்பில் முன்னாள்ஜனாதிபதி டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் அவர்களின் 10ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தசாப்த விழா நடைபெற்றது.




இவ்விழாவில் கலாம் அவர்களின் பேரனும் கல்வியாளருமான டாக்டர் ஷேக் சலீம் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பல்வேறு துறைகளில் சிறப்பாக செயல்பட்ட சாதனையாளர்களை பாராட்டி விருதுகள் வழங்கினார்.

மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த விகாசா ஜூபிளி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி தமிழாசிரியர் திரு. அழகுவேல் அவர்களுக்கு "சிறந்த ஆசிரியர் விருது" வழங்கப்பட்டதோடு, அவர் கல்வித்துறையில் நிகழ்த்தி வரும் அர்ப்பணிப்பு மற்றும் சிறப்பான பணிக்காக பாராட்டு பெற்றார். இவ்விருதை நேரில் டாக்டர் ஷேக் சலீம் வழங்கினார்.

அழகுவேலை பள்ளித் தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் உறவினர்கள் வாழ்த்தி மகிழ்ச்சி தெரிவித்தனர்.

# கட்சி கொடியில் உள்ள நிறங்களை பயன்படுத்த தடை கோரி வழக்கு கொள்கை அடையாளமாக அரசியல் கட்சிகள் கொடியை பயன்படுத்துகின்றன: உயர் நீதிமன்றத்தில் தவெக பதில் மனு

சென்னை, ஆக. 1

சிவப்பு, மஞ்சள், சிவப்பு நிறத்தில் கொடியை பயன்படுத்த தடை கோரி தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபை தாக்கல் செய்த வழக்கை அபராதத்துடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று த.வெ.க. தரப்பில் உயர் நீதிமன்றத்தில் பதில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசின் பதிவுத்துறையில், தங்கள் அமைப்பின் வணிக முத்திரையாக பதிவு செய்யப்பட்டுள்ள சிவப்பு மஞ்சள் சிவப்பு நிறத்தில் கொடியை பயன்படுத்த தமிழக வெற்றிக் கழகத்துக்கு தடை விதிக்கக் கோரி, தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபையின் நிறுவன தலைவர் பச்சையப்பன் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கில் தவெக சார்பில் பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் பதில் மனு தாக்கல் செய்துள்ளார். அதில், கொள்கை அடையாளமாகவே அரசியல் கட்சி கொடியை பயன்படுத்துகிறது. இதில் வர்த்தக நடவடிக்கையோ, பொருளாதார பரிவர்த்தனையோ எதுவும் இல்லை என்பதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும். த.வெ.க. எந்த வர்த்தகத்திலும், வணிக நடவடிக்கைகளிலும் ஈடுபடவில்லை. நடிகர் விஜய், அரசியலில் பங்கேற்பதை தடுக்க வேண்டும் என்ற அற்ப காரணத்துக்காக வழக்கு தொடரப்பட்டுள்ளது.



த.வெ.க. கட்சிக் கொடி என்பது வெறும் ஆபரணமல்ல. தமிழ் வரலாறு, கலாச்சாரம், அரசியலை உள்ளடக்கிய கொள்கை வடிவமைப்பு. புரட்சியை குறிக்க சிவப்பும், நம்பிக்கையை குறிக்க மஞ்சளும் பயன்படுத்தப்பட்டுள்ளது. நிறங்களை பயன்படுத்துவதற்கு இதுபோன்ற விளக்கங்களை மனுதாரர், வணிக முத்திரை பதிவின் போது அளித்துள்ளாரா என்று தெரியவில்லை. த.வெ.க. கொடியில் சிவப்பு மஞ்சள் சிவப்பு நிறங்களை பயன்படுத்த தடை விதித்தால், அது கட்சியின் அரசியல் இருப்பையே பாதிக்கச் செய்யும்.

வணிக முத்திரையை சங்கங்களுக்கு பயன்படுத்த முடியாது. இந்த வழக்கு விசாரணைக்கு உகந்ததல்ல என்பதால், அதிக அபராதத்துடன் வழக்கைதள்ளுபடி செய்ய வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது. இந்த வழக்கு, நீதிபதி செந்தில் குமார் ராமமூர்த்தி முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, த.வெ.க. பதில் மனுவுக்கு விளக்கம் அளிக்க தொண்டை மண்டல சான்றோர் தர்ம பரிபாலன சபை தரப்பில் அவகாசம் கேட்கப்பட்டது. இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி, விசாரணையை ஆகஸ்ட் 11ம் தேதிக்கு தள்ளிவைத்தார்.

# தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வாருங்கள்: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அழைப்பு

சென்னை, ஆக. 2

தமிழ்நாட்டில் முதலீடு செய்ய வாருங்கள் என்று முதலீட்டாளர்களுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அழைப்பு விடுத்தார். தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறையில் சார்பில் சென்னை, கோட்டூர்புரம் அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தமிழ்நாட்டின் புத்தமை அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாடு நேற்று நடைபெற்றது. இதையொட்டி அமைக்கப்பட்டிருந்த கண்காட்சியில், தமிழ்நாட்டை சேர்ந்த 16 ஆராய்ச்சியாளர்களின் காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்புகள் அடங்கிய அரங்குகளை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பார்வையிட்டு, ஆராய்ச்சியாளர்களுடன் கலந்துரையாடினார்.

நிகழ்ச்சியில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது: டிஜிட்டல் சகாப்தத்தில் தமிழகத்தின் பயணத்திற்கு அடித்தளமிட்டது கலைஞரின் தொலைநோக்கு தலைமைதான். அவர்தான் ஒரு துணிச்சலான மற்றும் முற்போக்கான நடவடிக்கையாக அர்ப்பணிப்புடன் கூடிய மாநில தகவல் தொழில்நுட்ப கொள்கையை அறிமுகப்படுத்திய இந்தியாவின் முதல் முதல்வர். பள்ளிகளில் கணினி கல்வியை கொண்டுவந்தார். டைடல் பூங்காக்களை அமைத்தார். இதன்மூலம் தமிழ்நாட்டில மில்லியன் கணக்கான இளைஞர்களின் வாழ்க்கையை மாற்றியமைத்து, அவர்களின் வாழ்க்கையை ஒளிரச் செய்துள்ளார்.



கலைஞரின் அடிச்சுவடுகளை பின்பற்றி, முதல்வர் மு.க.ஸ்டாலின் தமிழகத்தை தகவல் தொழில்நுட்பத்தில் முன்னணி மாநிலமாக மாற்றியுள்ளார். அது, தற்போது தமிழகத்தில் மாற்றத்திற்கான பாதையை உருவாக்கி வருகிறது. தொழில் முதலீடுகளை ஈர்ப்பதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக விளங்குகிறது. தமிழ்நாட்டில் அதிகளவில் தொழில் முதலீடுகள் குவிந்து வருகிறது. மென்பொருள் ஏற்றுமதியில் இந்திய அளவில் 3வது மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது. 'நான் முதல்வன்' திட்டம் மூலம் தமிழக மாணவர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் சாதித்து வருகின்றனர். இந்த மாநாடு மூலம் தமிழ்நாடு அரசுக்கும் முன்னணி தொழில்கள், உலகளாவிய மையங்கள் மற்றும் முதன்மையான கல்வி நிறுவனங்களுக்கும் இடையே பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின்றன.

இந்த கூட்டாண்மைகள் வலுவான தொடர்புகளையும், துடிப்பான கண்டுபிடிப்பு சுற்றுச்சூழல் அமைப்பையும் உருவாக்க உதவும். இது கூட்டு உருவாக்கம், நிதி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றத்திற்கு வழிவகுக்கும். தமிழ்நாட்டில் முதலீட்டிற்கான ஏராளமான வாய்ப்புகள் உள்ளன. எளிதாக வணிகம் செய்வதில் தமிழ்நாடு முதலிடத்தில் இருப்பதாக பல அறிக்கைகள் கூறியுள்ளது. தமிழ்நாட்டில் முதலீடு செய்ய உங்களை அழைக்கிறேன். நாம் ஒன்றாக முன்னேறுவோம். இவ்வாறு அவர் பேசினார். இதில் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன், மாநில திட்டக்குழுவின் செயல் துணைத் தலைவர் ஜெ.ஜெயரஞ்சன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அரசு செயலாளர் பிரஜேந்திர நவ்னித் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

# டாக்டர் ராதாகிருஷ்ணன் விருது விண்ணப்பங்கள் மீள்பதிவேற்ற ஆக.3 வரை வாய்ப்பு

சென்னை, ஆக. 2

டாக்டர் ராதாகிருஷ்ணன் விருதுக்கு விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்களில் குறிப்பிட்ட விண்ணப்பங்கள் மட்டுமே இணைய தளத்தில் பதிவேற்றம் ஆகியுள்ளதால், ஆகஸ்ட் 3ம் தேதிக்குள் பிழைகளை திருத்தி மீண்டும் பதிவேற்ற வேண்டும் என்று பள்ளிக் கல்வித்துறை அறிவித்துள்ளது. இந்த ஆண்டுக்கான விருது பெறத் தகுதியுள்ள ஆசிரியர்கள் தங்களுக்கான விண்ணப்பங்களை பள்ளிக்கல்வித்துறையின் EMIS இணைய தளம் மூலம் ஜூலை 20ம் தேதி முதல் ஆகஸ்ட் 3ம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது. அதன்படி 38 மாவட்டங்களில் இருந்து 1180 விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டன. ஆனால் அவற்றில் 42 விண்ணப்பங்கள் மட்டுமே முழுமையாக பதிவேறியுள்ளன. தவறாக



உள்ளீடு செய்திருந்தால், அதை திருத்தம் செய்து மீண்டும் சமர்ப்பிக்கும் வசதி EMIS தளத்தில் ஏற்படுத்தப்பட்டது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி விண்ணப்பங்களில் திருத்தங்கள் இருந்தால் அதை சரி செய்து ஆகஸ்ட் 3ம் தேதிக்குள் முழுமையான விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்ய வேண்டும் என்று பள்ளிக் கல்வித்துறை அறிவித்துள்ளது.

# வேலைநிறுத்தம் வாபஸ் சிலிண்டர் விநியோகம் சீராக தொடரும்: இந்தியன் ஆயில் உறுதி

சென்னை, ஆக. 1

லாரி உரிமையாளர்கள் சங்கம் வேலை நிறுத்தத்தை வாபஸ் பெறுவதை தொடர்ந்து, மாநிலம் முழுவதும் சிலிண்டர் விநியோகம் சீராக தொடரும் என்று இந்தியன் ஆயில் நிறுவனம் உறுதியளித்துள்ளது. இதுகுறித்து இந்தியன் ஆயில் நிறுவனம் வெளியிட்ட அறிக்கை: தமிழகத்தில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு எல்பிஜி விநியோகம் தடையின்றி தொடரும். பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி எல்பிஜி சிலிண்டர் லாரி உரிமையாளர்கள் சங்கம் வரும் 1ம் தேதி நாளை முதல் காலவரையற்ற வேலைநிறுத்தத்தை அறிவித்தது. நேற்று இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், லாரி உரிமையாளர்கள் சங்கத்துடன் பேச்சு



வார்த்தை நடத்தியது. கலந்துரையாடலின் அடிப்படையில், அவர்கள் வேலைநிறுத்தத்தை வாபஸ் பெற ஒப்புக்கொண்டனர். தமிழகத்தில் உள்ள கோடிக்கணக்கான குடும்பங்களின் முக்கிய எரிசக்தி கூட்டாளியான இந்தியன் ஆயில், நம்பகத்தன்மை, பொறுப்பு மற்றும் பரிவுடன் இடையில்லா சேவையை வழங்குவதில் உறுதியாக உள்ளது. இவ்வாறு அறிக்கையில்கூறப்பட்டுள்ளது.

# அரும்பாக்கத்தில் உள்ள யோகா மற்றும் இயற்கை மருத்துவ கல்லூரியில் சேர கால அவகாசம் நீட்டிப்பு

சென்னை, ஆக. 2

அரும்பாக்கத்தில் உள்ள யோகா மற்றும் இயற்கை மருத்துவ கல்லூரிகளில் சேர கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆனணயரகம் (அரும்பாக்கம்) நேற்று வெளியிட்டுள்ள அறிக்கை: 2025 2026ம் கல்வியாண்டில் அரசு மற்றும் சுயநிதி யோகா மற்றும் இயற்கை மருத்துவ கல்லூரிகளில் உள்ள அரசு. அரசு ஒதுக்கீட்டு இடங்கள் மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கான பி.என்.ஒய்.எஸ். (யோகா மற்றும் இயற்கை மருத்துவம்) பட்டப்படிப்பு சேர்க்கைக்கான இணையவழி விண்ணப்பங்கள் கடந்த 17ம் தேதி முதல் தனித்தனியாக பெறப்பட்டு வருகிறது. பி.என்.ஒய்.எஸ். பட்டபடிப்புக்கான (தகவல் தொகுப்பேட்டினை, www.tnhealth.tn.gov.in., www.tnayushselection.org. என்ற வலைதளங்களில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இணையவழியில் மட்டுமே விண்ணப்ப படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கத் தேவையான தகுதிகள், விண்ணப்பக் கட்டணம் மற்றும் பிற கட்டண விவரங்கள், கலந்தாய்விற்கான அட்டவணை மற்றும் பிற தகவல்களினை www.tnhealth.tn.gov.in., www.tnayushselection.org. என்ற வலைதளங்களில் உள்ள உரிய தகவல் தொகுப்பேட்டில் அறியலாம். விண்ணப்ப கட்டணம், இணையவழி கலந்தாய்வு கட்டணம், கல்விக் கட்டண முன்பணம் இவை அனைத்தும் இணையவழி மூலமாக




மட்டுமே செலுத்த வேண்டும். அரசு ஒதுக்கீடு மற்றும் நிர்வாக ஒதுக்கீடு விண்ணப்பங்கள் செயலாளர், தேர்வுக் குழு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை ஆணையர் அலுவலகம், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனை வளாகம், அரும்பாக்கம், சென்னை600106 என்ற முகவரிக்கு 01.08.2025 என்று இருந்தது, 08.08.2025 மாலை 5 மணிக்குள் சமர்ப்பிக்க கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# கூட்டணி குறித்து அறிவிப்பு ஓ.பன்னீர்செல்வம் பேட்டி

மதுரை, ஆக. 1

2 நாட்கள் பயணமாக தமிழகம் வந்த பிரதமர் நரேந்திர மோடிக்கு, 'தூத்துக்குடி விமான நிலையத்தில் உங்களை வரவேற்கவும், வழியனுப்பி வைக்கவும் அனுமதி கிடைத்தால் பெருமையாக இருக்கும்' என்று வெளிப்படையாக கடிதம் எழுதியிருந்தார் ஓ.பன்னீர் செல்வம். இருப்பினும், பிரதமரை சந்திக்க அவருக்கு அனுமதி கிடைக்கவில்லை. அதே சமயம், எடப்பாடி பழனிசாமி, ஜி.கே வாசன், ஏ.சி. சண்முகம் ஆகியோர் பிரதமரை சந்தித்து பேசினர்.

இது, ஓ.பன்னீர் செல்வம், மற்றும் அவரது ஆதரவாளர்களை அதிருப்தியில் ஆழ்த்தியது. ஏற்கனவே, தமிழகத்திற்கு வந்த மத்திய உள்துறை மந்திரி அமித் ஷாவும் ஓபிஎஸ்ஸை சந்திக்காமல் தவிர்த்தார். இந்த நிலையில், தற்போது பிரதமரும் ஓபிஎஸ்ஸை புறக்கணிப்பது, அவருடைய ஆதரவாளர்களுக்கு அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

இதனால் கடந்த சில நாட்களாக தேசிய ஜனநாயக கூட்டணியை முறித்துக் கொண்டு ஓபிஎஸ், தவெகவுடன் கைகோர்ப்பார் என்று அவருக்கு



நெருக்கமான வட்டாரங்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றன. குறிப்பாக, தவெகவுக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கும் நிலையில், அந்த கட்சியில் அனுபவம் மிக்க தலைவர்கள் இல்லாததால், ஓபிஎஸ்ஸுடன் கூட்டணி வைத்தால் அது அக்கட்சிக்கு பக்கபலமாக இருக்கும் எனவும் பேசப்பட்டது.

இது ஒறுபுறம் இருக்க, ஓ.பி.எஸ். தனிக்கட்சி தொடங்க உள்ளதாகவும் செய்திகள் உலா வருகின்றன. பா.ஜ.க. கூட்டணியில் இடம் கிடைக்காததால் அடுத்த கட்டம் குறித்து நிர்வாகிகளிடம் ஓ.பன்னீர்செல்வம் ஆலோசனை நடத்தி வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில், சென்னை செல்வதற்காக மதுரை விமான நிலையம் வந்த ஓ.பன்னீர் செல்வம் செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:

சென்னையில் நாளை காலை செய்தியாளர் சந்திப்பில் அனைத்து கேள்விகளுக்கும் பதிலளிக்கிறேன். த.வெ.க.வுடன் கூட்டணி உள்ளிட்ட கேள்விகளுக்கு நாளை பதில் சொல்கிறேன் என்றார்.

# தமிழ்நாட்டின் புத்தமை அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாட்டை தொடங்கி வைத்த உதயநிதி ஸ்டாலின்

சென்னை ஆக. 1

சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்றுவரும் தமிழ்நாட்டின் புத்தமை அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாட்டை துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

இது தொடர்பாக தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில்,

துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் , தமிழ்நாடு அரசின் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள்துறையின்கீழ் செயல்பட்டு வரும் தமிழ்நாடு தொழில்நுட்ப (ஐடிஎன்டி) மையத்தின் சார்பில் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் இன்று (30.7.2025) நடைபெற்ற "அறிவுசார் சக்தி மையம், தமிழ்நாட்டை இந்தியாவின் புத்தாக்க தலைநகராக மாற்றுதல்" என்ற கருப்பொருளை கொண்ட "தமிழ்நாட்டின் புத்தமை (IN2TN) அறிவுசார் சொத்துரிமை முதலாவது மாநாட்டை" தொடங்கி வைத்தார்.

மாநாட்டினையொட்டி அமைக்கப்பட்டிருந்த தொழில்நுட்ப கண்காட்சியில், காட்சிப்படுத்தப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த 16 ஆராய்ச்சியாளர்களின் காப்புரிமை பெற்ற ஆழ்நிலை தொழில்நுட்ப (DEEP TECH) கண்டுபிடிப்புகள் அடங்கிய அரங்குகளை பார்வையிட்டு, ஆராய்ச்சியாளர்களுடன் கலந்துரையாடினார். மாநிலத்தின் டிரில்லியன் டாலர் பொருளாதார தொலைநோக்கு பார்வையை நோக்கி உங்களது பயணத்தை தொடரவேண்டும் என்று ஆராய்ச்சியாளர்களை ஊக்குவித்தார்.

இந்த மாநாட்டில் துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ஐடிஎன்டி மையத்தில் நடத்தப்பட்ட பாத் பைண்டர் நிகழ்ச்சிகளின் மூலம் உள்வளர்ச்சி பெற்ற 5 ஆழ்நிலை தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்களுக்கு, ஐடிஎன்டி மையத்தின் பவுண்டேஷன் நிதியின் கீழ் விதை நிதியாக மொத்தம் 53.00 லட்சம் ரூபாய்க்கான காசோலைகளை வழங்கினார்.

இந்த மாநாட்டில் துணை முதல்அமைச்சர் முன்னிலையில், ஐடிஎன்டி மையத்தில் உள்ள தமிழ்நாடு தொழில்நுட்ப பரிமாற்ற வசதி மையத்தின் (டிஎன்டிடிஎப்சி) சார்பில் கல்வி ஆராய்ச்சியாளர்கள்தாங்கள் கண்டு



பிடித்த காப்புரிமை பெற்ற கண்டுபிடிப்புகளை தொழில்நிறுவனங்கள் பயன்படுத்திக் கொள்வதற்கான, கல்வி ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில்நிறுவனங்களுக்கு இடையே நான்கு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும் ஐடிஎன்டி மையத்தின் ஆதரவு பெற்ற ஆழ்நிலை தொழில்நுட்பம் மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்ப புத்தொழில் நிறுவனங்களுக்கு உதவிகளை வழங்கும் வகையில், ஐடிஎன்டி மையம் அமெரிக்கன் சொசைட்டி ஆப் மெக்கானிக்கல் இன்ஜினியர்ஸ் இந்தியா (ASME), தேசிய ஆராய்ச்சி மேம்பாட்டுக் கழகம் (NRDC), பெங்களூரில் செயல்பட்டு வரும் மத்திய உயர் கணினி மேம்பாட்டு மையம்(CDAC), போஷ் (Bosch) இந்தியா, மஹிந்திரா அண்டு மஹிந்திரா (Mahindra and Mahindra) மற்றும் இந்திய அறிவியல் தொழில்நுட்பம் மற்றும் பொறியியல் வசதிகள் வரைபடம் (ISTEM) ஆகிய ஆறு நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களையும், தமிழ்நாடு தொழில்நுட்ப பரிமாற்ற வசதி மையத்தின் சட்டபூர்வ பங்குதார்களின் விருப்பக் கடிதங்களும் பரிமாறிக்கொள்ளப்பட்டன.

இந்த மாநாட்டில், தமிழ்நாடு முழுவதும் உள்ள பொறியியல் கல்லூரிகள், வளர்தொழில் காப்பகங்கள், புத்தொழில் நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள், முதலீட்டாளர்கள் மற்றும் அரசுத் துறை சேர்ந்த ஆழ்நிலை மற்றும் வளர்ந்து வரும் தொழில்நுட்ப ஆராய்ச்சியாளர்கள், காப்புரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியில் தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள்துறை அமைச்சர் பிடிஆர் பழனிவேல் தியாகராஜன், மாநிலத் திட்டக்குழுவின் செயல் துணைத் தலைவர் ஜெயரஞ்சன், அரசு அதிகாரிகள், ஆராய்ச்சியாளர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கீழடியை வைத்து சிலர் அரசியல் செய்கின்றனர் எடப்பாடி பழனிசாமி



சிவகங்கை, ஆக. 1

தமிழ்நாட்டில் 2026 காண சட்டமன்ற தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. இந்த நிலையில், அதிமுக வுடன் கூட்டணி அமைத்து தேர்தலை சந்திக்க உள்ளது. மேலும் கட்சியை வலுப்படுத்தும் கட்சியை வலுப்படுத்தும் நோக்கிலும், திமுக அரசு செயல்படுத்தாத வாக்குறுதிகள் மற்றும் குறைகள் குறித்து மக்களிடம் எடுத்துரைக்கும் வகையில்'' தமிழகத்தை மீட்போம் மக்களை காப்போம்.. ''என்ற பெயரில் மாவட்டம் வாரியாக அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி முற்றுப் பயணம் மேற்கொண்டு வருகிறார். அந்த வகையில் சிவகங்கை மாவட்டத்திற்கு தற்பொழுது எடப்பாடி பழனிசாமி சுற்றுப்பயணம் மேற்கொண்டு உள்ளார்.

இந்தநிலையில், கீழடி அருங்காட்சியகத்தை பார்வையிட்ட பின் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்சந்திப்பில்கூறியதாவது:

இப்போது கீழடியை வைத்து சிலர் அரசியல் செய்கின்றனர். தமிழனின் பெருமையை பறைசாற்றுவதே எங்கள் நோக்கம். கீழடி தொடர்பாக மத்திய அரசு கேட்கும் விளக்கத்தை மாநில அரசு கொடுக்க வேண்டும். என்ன விளக்கம் என்பதில் வெளிப்படையாக எதுவும் சொல்லப்படவில்லை என்பதால், இரு பக்கமும் என்ன முரண் நிலவுகிறது என தெரியவில்லை. இருப்பினும் கீழடி தொடர்பாக மாநில அரசு கேட்பவைக்கு நாங்கள் துணை நிற்போம் என்றார்.

# தமிழக பாஜக துணைத்தலைவரானார் குஷ்பு



சென்னை ஆஅ. 1

தமிழக பாஜகவில் புதிய நிர்வாகிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். அதில், குஷ்பு, சக்ரவர்த்தி, துரைசாமி, ராமலிங்கம், கரு.நாகராஜன், சசிகலா புஷ்பா உள்பட 14 பேர் பாஜக மாநில துணைத்தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்ட எக்ஸ் பதிவில், பாஜக தேசிய தலைவர் ஜேபி நட்டா ஒப்புதலுடன் தமிழக பாஜகவுக்கு புதிய மாநில நிர்வாகிகள் நியமனம் செய்யப்படுகிறார்கள். ..! தங்களுடைய பணிகள் சிறக்க வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன்..!' இவ்வாறு பதிவிடப்பட்டுள்ளது.


அதன்படி, தமிழக பாஜக மாநில துணைத்தலைவர்களாக நியமிக்கப்பட்டவர்கள் விவரம்:

சக்ரவர்த்தி துரைசாமி ராமலிங்கம் கரு.நாகராஜன்சசிகலா புஷ்பா கனகசபாபதி டாலின்ஸ்ரீதர்சம்பத்ால்கனகராஜ்ஜெயபிரகாஷ்வெங்கடேசன்கோ பால்சாமி குஷ்பு சுந்தர்சு ந்தர்த மிழக பாஜக மாநில பொதுச்செயலாளர் (அமைப்பு) விவரம்: கேசவ விநாயகன்த மிழக பாஜக மாநில பொதுச்செயலாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள் விவரம்: பாலகணபதி ராம. ஸ்ரீ நிவாசன் முருகானந்தம்கா ர்த்தியாயினி முருகானந்தம்த மிழக பாஜக மாநில செயலாளர்களாக நியமிக்கப்பட்டவர்கள் விவரம்: கராத்தே தியாகராஜன்வெ ங்கடேசன்ம லர்கொடி சுமதி வெங்கடேசன்மீ னாட்சி சதீஷ்குமார் மீனாதேவ் வினோத் செல்வம் அஸ்வத்தாமன் ஆனந்தபிரியா

பிரமிளா சம்பத் கதளி நரசிங்கபெருமாள் நந்தகுமார் ரகுராமன் (எ) முரளி அமர்பிரசாத் ரெட்டி தமிழக பாஜக மாநில பொருளாளர் விவரம்: சேகர் தமிழக பாஜக மாநில இணை பொருளாளர் விவரம்: சிவசுப்பிரமணியம் தமிழக பாஜகமாநிலபிரிவுஅமைப்பாளர் / இணை அமைப்பாளர் விவரம்: கே.டி.ராகவன் நாச்சியப்பன்தமிழக பாஜக மாநில அலுவலக செயலாளர்விவரம்:சந்திரன்தமிழக பாஜக மாநில சமூக ஊடக விவரம்:

பாலாஜி தமிழக பாஜக மாநில தகவல் தொடர்பு அமைப்பாளர் விவரம்: மகேஷ்குமார்தமிழகபாஜக மாநில தலைமை செய்தி தொடர்பாளர் விவரம்: நாராயணன் திருப்பதி தமிழக பாஜக மாநில ஊடக அமைப்பாளர் விவரம்: ரெங்கநாயகலு இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மெல்லக்கூடிய புகையிலை பயன்படுத்தினால் அபராதம் மெட்ரோ ரயில் நிர்வாகம் எச்சரிக்கை



சென்னை, ஆக. 2

சென்னை மெட்ரோ ரயில்கள் மற்றும் ரயில் நிலையங்களில் மெல்லக் கூடிய புகையிலை பொருட்களை பயன்படுத்தினால் அபராதம் விதிக்கப்படும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மெட்ரோ நிர்வாகம் தரப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:

மெல்லும் புகையிலை பொருட்களின் விளைவாக எச்சில் துப்புவதாலும் குப்பைகள் போடுவதாலும் தூய்மையையும் சுகாதாரத்தையும் பராமரிக்க நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படுகின்றது. அந்த வகையில், மெல்லக் கூடிய புகையிலை பயன்படுத்தினால் அபராதம் விதிக்கப்படும்.

மெட்டல்டிடெக்டர்கள் மூலம் கண்டறிய முடியாததால் அனைத்து மெட்ரோ நிலையங்களிலும் உடல் சோதனைகள் மேற்கொள்ளப்படும். கோயம்பேட்டில் அமைந்துள்ள சென்ட்ரல் பாதுகாப்பு கண்காணிப்பு அறை, விதிமீறல்களை தீவிரமாக கண்டறிந்து பாதுகாப்பு பணியாளர்களுக்கு உடனடியாக தெரிவிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது" இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# குரூப்1 தேர்வில் கட்ஆப் மார்க் குறைந்ததால் விரக்தி: அரசு ஊழியர் தூக்குப்போட்டு தற்கொலை



சிவகங்கை ஆக. 1

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம்அருகேஉள்ள அல்லிநகரம் கிராமத்தைச் சேர்ந்தவர், ராஜேந்திரன். இவருடைய மகன் நடராஜன் (27 வயது). மாற்றுத்திறனாளியான இவர் ஏற்கனவே குரூப்4 தேர்வில் வெற்றி பெற்று கடந்த ஒரு ஆண்டுக்கு மேலாகதிருப்புவனம் யூனியனில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வந்தார்.

இந்த நிலையில் குரூப்1 தேர்வு எழுதி வெற்றி பெற்று நேர்முக தேர்வு வரை சென்றுள்ளார். அங்கு அவருக்குகட் ஆப் மார்க் எதிர்பார்த்தபடி கிடைக்கவில்லை எனக்கூறி மனவருத்தத்தில் இருந்தார். நடராஜனின் தந்தை ராஜேந்திரன், வெளியூரில் தங்கி கூலி வேலை செய்து வருகிறார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் நடராஜனின் தாயார் நூறு நாள் வேலைக்கு சென்று உள்ளார். அப்போது, மின் விசிறியில் நடராஜன் தூக்கில் தொங்கி உள்ளார். இதை அறிந்த அக்கம்பக்கத்தினர் அவரை மீட்டு திருப்புவனம் அரசு மருத்துவனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவரை பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கெனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர்.

இதுகுறித்து அவரது தந்தை ராஜேந்திரன் திருப்புவனம் போலீசில் புகார் செய்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஆலங்குடி: செல்லியம்மன் கோவில் மது எடுப்பு விழா



புதுக்கோட்டை ஆக. 1

ஆலங்குடி அருகே உள்ள குப்பக்குடி செல்லியம்மன் கோவிலில் ஆடி மாத மது எடுப்பு விழா கடந்த 22ம் தேதி செல்லியம்மனுக்கு காப்பு கட்டுதல் நிகழ்ச்சியுடன் தொடங்கியது. விழா நாட்களில் தினந்தோறும் அம்மனுக்கு அபிஷேக ஆராதனை நடைபெற்று வந்தது. விழாவின் முக்கிய நிகழ்வாக குப்பக்குடி, பாத்தம்பட்டி மற்றும் மேலக் கோட்டை ஆகிய மூன்று கிராமங்களிலிருந்து பக்தர்கள் இன்று மது எடுத்து வந்து அம்பாளுக்கு நேர்த்திக்கடன் செலுத்தினர்.

இதையொட்டி இன்று அதிகாலை மூன்று கிராமங்களைச் சேர்ந்த பக்தர்கள் செப்புக்குடம், சில்வர்குடம் ஆகியவற்றில் நவதானியங்களைஇட்டுதென்னம் பாளையை செருகி வைத்தனர். வீட்டு வாசலில் பசுஞ்சாணத்தால் மெழுகி கோலம் போட்டனர். பின்னர் அதில் அலங்கரிக்கப்பட்ட மது குடங்களை வைத்து தீபம் காட்டி ஆராதனை செய்தனர். பின்னர் செண்டை மேளம் முழங்க குப்பக்குடி, பாத்தம்பட்டி மற்றும் மேலக்கோட்டை கிராமங்களில் இருந்து பெண்கள் மது குடங்களுடன் குலவையிட்டு, கும்மியடித்து, ஆரவாரத்துடன் புறப்பட்டனர். அனைவரும் குப்பக்குடியில் ஒன்று சேர்ந்து செல்லியம்மன் கோவிலுக்கு ஊர்வலமாக சென்றனர். கோவிலை அடைந்ததும் மதுக்குடங்களை சுமந்துகொண்டு கோவிலை வலம் வந்து வழிபட்டனர். அப்போது கோவில்பூசாரிதீபாராதனை காட்டினார்.

பின்னர் மது பூக்களுடன் கூடிய பாளையை கோவில் அருகில் ஒரு இடத்தில் போட்டுவிட்டு நவதானியங்களை கோவிலின் சன்னதியில் கொட்டினார்கள். அப்போது அனைவருக்கும் விபூதி பிரசாதம் வழங்கப்பட்டது. பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. மழை வேண்டியும், விவசாயம் செழிக்கவும், அம்மை நோயிலிருந்து மக்களை காப்பற்ற வேண்டியும் அம்பாளுக்கு மது எடுப்பு விழா நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

# அஜித்குமார் கொலை வழக்கு: கைதான 5 போலீசாரின் காவல் 13ந்தேதி வரை நீட்டிப்பு



மதுரை, ஆக. 1

சிவகங்கை மாவட்டம் மடப்புரம் பத்ரகாளியம்மன் கோவில் காவலாளி அஜித்குமார் கொலை வழக்கில் சிறப்பு தனிப்பி ரிவு போலீஸ்காரர்கள் கண்ணன், பிரபு, ஆனந்த், ராஜா, சங்கரமணிகண்டன் ஆகிய 5 பேர் கைது செய்யப் பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர். இந்த வழக்கை விசாரித்து வரும் சி.பி.ஐ. அதிகாரிகள் சிறையில் உள்ள 5 போலீஸ்காரர்களை காவலில் எடுக்க முடிவு செய்து, இது தொடர்பான மனுவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனு விரைவில் விசாரணைக்கு வந்த பின் சி.பி.ஐ. அதிகாரிகள் போலீஸ்காரர்களை விசாரிப்பார்கள் என தெரிகிறது. இந்த நிலையில் கொலை வழக்கில் கைதாகி சிறையில் உள்ள 5 பேரின் நீதிமன்ற காவல் இன்றுடன் முடிவடைந்தது. இதையடுத்துஅவர்கள்மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் நேரில் ஆஜர்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்தநீதிபதி 5போலீஸ்காரரின் காவலை ஆகஸ்டு 13ந்தேதி நீட்டித்து உத்தரவிட்டார். வழக்கு விசாரணையை முன்னிட்டு நீதிமன்ற வளாகத்தில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

# ஓட்டலில் தங்கி இளம்பெண்ணுடன் உல்லாசம்: மறுநாள் காலையில் கண் விழித்து பார்த்த தொழில் அதிபருக்கு காத்திருந்த அதிர்ச்சி

சென்னை, ஆக .2

சென்னை ஆவடி காமராஜர் மெயின் ரோட்டில் வசித்து வரும் 47 வயது தொழில் அதிபர். இவர் கோடம்பாக்கம் நெடுஞ்சாலையில் உள்ள ஓட்டலுக்கு சென்று அங்குள்ள பாரில் மது அருந்தி உள்ளார். அவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த காதலியான இளம்பெண்ணும் மதுகுடித்துள்ளார். போதை தலைக்கு ஏறிய நிலையில் இருவரும் அதே ஓட்டலில் அறை எடுத்து தங்கி இரவு முழுவதும் உல்லாசமாக இருந்துள்ளனர். மறுநாள் காலையில் கண்விழித்து பார்த்தபோது தனது அருகில் தூங்கிக்கொண்டிருந்த இளம்பெண் காணாமல் போயிருந்தார். தொழில் அதிபர் கழுத்தில் அணிருந்திருந்த 10 பவுன் நகையும் மாயமாகி இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தார்.

தொழில் அதிபருடன் உல்லாசமாக இருந்த இளம்பெண் அவரது செயினை திருடி கொண்டு ஓட்டலில் இருந்து தப்பி சென்றிருப்பது தெரியவந்துள்ளது. இது தொடர்பாக தேனாம்பேட்டை போலீசில் தொழில் அதிபர் புகார் அளித்தார்.

புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து 10 பவுன் நகையுடன் தப்பி ஓடிய கில்லாடி பெண்ணை தேடி வருகிறார்கள். தலைமறைவான பெண் தொழில் அதிபரின் காதலி ஆவார்.இருவரும் இது போன்று அடிக்கடி வெளியில் தங்கி உல்லாசமாகஇருப்பதுவழக்கமாம். அதுபோன்று தான் கோடம்பாக்கத்திலும் ஓட்டலில் நன்றாக மது குடித்துவிட்டு அறை எடுத்து தங்கி உல்லாசமாக இருந்துள்ளனர். இதனை பயன்படுத்தியே தொழில்

அதிபரின் காதலி அவரிடம் இருந்து 10 பவுன் நகையை நைசாக திருடிக் கொண்டு தப்பி உள்ளார். நகையுடன் தப்பி சென்ற இளம்பெண் தீபிகா (வயது 28) என தொழில் அதிபர் தெரிவித்து இருக்கிறார். இதன்பேரில் அவரை கைது செய்தவற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

# காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 42வது கூட்டம் டெல்லியில் நடைபெற்றது



புதுடெல்லி, ஆக. 1

தலைநகர் டெல்லியில் காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர் எஸ்.கே.ஹல்தார் தலைமையில் நடைபெற்ற காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் 42வது கூட்டத்தில் தமிழ்நாடு உறுப்பினர் மற்றும் அரசு செயலாளர், நீர்வளத்துறை ஜெ. ஜெயகாந்தன், சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொலி காட்சி வாயிலாக கலந்து கொண்டார்.

அப்போது பேசிய அவர், தற்பொழுது (30.07.2025) மேட்டூர் அணையின் நீர் இருப்பு அதன் முழு கொள்ளளவான 93.470 டி.எம்.சி ஆக உள்ளது எனவும், கர்நாடக அணைகளான கிருஷ்ணராஜசாகர் மற்றும் கபினி அணைகளில்

இருந்து அதிகமான உபரி நீர் வெளியேற்றப்படுவதினால் மேட்டூர் அணைக்கு இன்று காலை நீர்வரத்து வினாடிக்கு 1,12,555 கன அடியாக இருந்த நிலையில் தற்போது குறைந்து வருகிறது என்றும், ஆகையால் நிலைமைக்கு ஏற்ப மேட்டூர் அணையிலிருந்து நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது என்றும் தெரிவித்தார்.

கர்நாடக அணைகளின் நீர் இருப்பு மற்றும் நீர் வரத்து கணிசமான அளவு தொடர்ந்து வருவதினாலும், தமிழகத்திற்கு 2025, ஆகஸ்டு மாதத்திற்கு வழங்கப்பட வேண்டிய நீர் அளவான 45.95 டி.எம்.சி. நீர் வழங்கப்படுவதை உறுதி செய்யுமாறும் ஆணையத்தை வலியுறுத்தினார். இக்கூட்டத்தில் காவிரி தொழில் நுட்பக் குழுமத்தின் தலைவர் ரா.சுப்பிரமணியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# வளர்பிறை சஷ்டி: முருகன் கோவில்களில் சிறப்பு பூஜைகள்



சென்னை, ஆக .1

கிருத்திகை, சஷ்டி போன்ற முக்கிய விசேஷ நாட்களில் முருகன் கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடத்தப்படும். அவ்வகையில் இன்று ஆடி மாத வளர்பிறை சஷ்டியை முன்னிட்டு முருகன் கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.

ஊட்டி எல்க்ஹில் முருகன் கோவில், மார்க்கெட் பகுதி பாலசுப்பிரமணியன் உள்ளிட்ட முக்கிய கோவில்களில் சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. கூடலூர் அருகே ஓவேலி சந்தன மலை முருகனுக்கு மகாபிஷேகம் செய்யப்பட்டது. தொடர்ந்து சிறப்பு ராஜ அலங்காரம் செய்யப்பட்டு மகா தீபாரதனை காண்பிக்கப்பட்டது. கூடலூர், நந்தட்டி, பந்தலூர், மசினகுடி பகுதியில் உள்ள முருகன் கோவில்களிலும் சஷ்டி சிறப்பு பூஜைகள் நடைபெற்றன. இதில் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

நாமக்கல் மாவட்டம், பரமத்திவேலூர் அருகே உள்ள பொத்தனூரில் பழமையான பச்சைமலை பாலதண்டாயுதபாணி சுவாமிக்கு பால், தயிர், தேன், பஞ்சாமிர்தம், திருமஞ்சனம், இளநீர், பன்னீர் உள்ளிட்ட பல்வேறு திரவியங்களால் சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. பின்னர் சிறப்பு அலங்காரமும், மகா தீபாராதனையும் நடைபெற்றது.

இதேபோல் கபிலர்மலை பாலசுப்பிரமணிய சுவாமி கோவில், பாண்டமங்கலம் புதிய காசி விஸ்வநாதர் கோவிலில் உள்ள சுப்பிரமணியர், அனிச்சம் பாளையத்தில் உள்ள வேல் வடிவம் கொண்ட சுப்பிரமணியர், பிலிக்கல்பாளையம், கரட்டூரில் உள்ள விஜயகிரிவடபழனிஆண்டவர், பரமத்தி வேலூர் பேட்டை பகவதி அம்மன் கோவிலில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான், பாலப்பட்டி கதிர்மலை கந்தசாமி கோவில், கந்தம்பாளையம் அருணகிரிநாதர் மலையில் உள்ள வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர், நன்செய் இடையாறு காவேரி ஆற்றங்கரை அருகே உள்ள மூங்கில் வனத்து சங்கிலி கருப்பண்ணசாமி கோவிலில் உள்ள வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர் கோவில்,

நன்செய் இடையார் திருவேலீஸ்வரர் கோவிலில் உள்ள சுப்ரமணியர், ராஜா சுவாமி திருக்கோவிலில் உள்ள ராஜாசுவாமி, கோப்பணம்பாளையம் பரமேஸ்வரர் கோவிலில் எழுந்தருளியுள்ள பாலமுருகன், பொத்தனூர் சக்தி விநாயகர் கோவிலில் உள்ள பாலமுருகன் என பல்வேறு கோவில்களில் முருகப்பெருமானுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகளும், சிறப்பு அலங்காரமும், மகா தீபாராதனையும் நடைபெற்றன. இதில் அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த பக்தர்கள் கலந்து கொண்டு முருகப்பெருமானை தரிசனம் செய்தனர்.

# அரசு பள்ளிகளில் மாணவர் சேர்க்கை 4 லட்சத்தை கடந்தது அமைச்சர் பெருமிதம்

சென்னை ஆக. 1

தமிழக பள்ளிக்கல்வித்துறையின்கீழ் 37 ஆயிரத்திற்கும் மேற்பட்ட அரசு பள்ளிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் சுமார் 50 லட்சத்திற்கும்மேற்பட்டமாணவ, மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். மாணவர்கள் நலனுக்காக கற்பித்தல், கற்றல் சார்ந்து எண்ணும்எழுத்தும், காலை உணவு, ஸ்மார்ட் வகுப்பறைகள் உட்பட பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

இதனிடையே, அரசுப் பள்ளிகளில் 202526 கல்வியாண்டுக்கான மாணவர் சேர்க்கை கடந்த மார்ச் 1ம் தேதி தொடங்கி விறு விறுப்பாக நடைபெற்று வருகிறது. பெற்றோர்கள் பலர் ஆர்வமுடன் தங்கள் பிள்ளைகளை அரசு பள்ளியில் சேர்த்து வருகின்றனர்.

இந்நிலையில், தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகளில் புதிதாக 4 லட்சம் மாணவமாணவியர் சேர்ந்துள்ளனர். கேவி வகுப்புகளில் 32,807 மாணவமாணவியர், தமிழ் வழி 1ம் வகுப்பில் 2 லட்சத்து 11 ஆயிரத்து 563 மாணவமாணவியர், ஆங்கில வழி 1ம் வகுப்பில் 63 ஆயிரத்து 896 மாணவமாணவியர், 2ம் வகுப்பு முதல் 8ம் வகுப்பு வரை 92 ஆயிரத்து 98 மாணவமாணவியர் என மொத்தம் 4 லட்சத்து 364 மாணவமாணவியர் அரசு பள்ளிகளில் சேர்ந்துள்ளனர்.

இது தொடர்பாக பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி வெளியிட்ட எக்ஸ் பதிவில்,

அரசு பள்ளி மாணவர் சேர்க்கை 4 லட்சம்! ஆயிரம் முத்தங்களுடன் மாணவச் செல்வங்களை வரவேற்கிறோம். "அரசுப் பள்ளி என்பது வறுமையின் அடையாளம் அல்ல! அது பெருமையின் அடையாளம்" என தெரிவித்துள்ளார்.

# நீலகிரி: குடியிருப்பில் சுற்றித்திரியும் கரடியை பிடிக்க கூண்டு வைப்பு



நீலகிரி ஆக. 1

நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக வனவிலங்குகள் எண்ணிக்கை அதிகரிப்பு, உணவு பற்றாக்குறை உள்பட பல்வேறு காரணங்களால் வனப்பகுதியில் இருந்து வனவிலங்குகள் ஊருக்குள் புகும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது. அப்போது மனிதவனவிலங்கு மோதல் ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படுகிறது. இதை தடுக்க வனத்துறையினர் நடவடிக்கை எடுத்து வந்தாலும், பிரச்சினையின் தீவிரம் குறையாமல் உள்ளது.

குன்னூர் அடுத்த அம்பிகாபுரம் பகுதியில் தற்போது பேரி, ஆரஞ்சு கொய்யா போன்ற பழ சீசன் தொடங்கியுள்ளது. இந்த பழங்களை ருசி பார்க்க வனப்பகுதியில் இருந்து கரடிகள் இரவு, பகல் நேரங்களில் குடியிருப்பு பகுதிகளுக்கு வருவது வாடிக்கையாக உள்ளது.

இந்த நிலையில் இன்று அம்பிகாபுரம் கிராமத்திற்குள் புகுந்த ஒரு கரடி, பகல் நேரத்தில் குடியிருப்பு பகுதியில் அங்கும், இங்கும் உலா வந்தது. இந்த கரடியை கடந்த 2 நாட்களாக வனத்துறையினர் விரட்டிய போதும், மீண்டும் அதே பகுதிக்கு கரடி வருகிறது. குடியிருப்பு பகுதியில் கரடி சுற்றித்திரிந்து வருவதால், பொதுமக்கள் அச்சம் அடைந்துள்ளனர். கரடி நடமாடும் வீடியோ காட்சிகள் வெளியாகி உள்ளது.

இதனால் வனத்துறையினர் கரடியை கூண்டு வைத்து பிடிக்க நடவடிக்கை எடுத்துள்ளனர். இருந்தபோதிலும், பள்ளி மாணவமாணவிகள் மற்றும் அன்றாட பணிக்கு செல்வோர் அந்த வழியாக செல்ல முடியாமல் மிகுந்த அச்சத்தில் உள்ளனர். எனவே, கரடியை பிடிக்கும் நடவடிக்கையில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மேம்பால கட்டுமான பணி: சென்னை மத்திய கைலாஷ் பகுதியில் போக்குவரத்து மாற்றம்

சென்னை, ஆக 1

சென்னை போக்குவரத்து போலீசார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ராஜீவ் காந்தி சாலையின்மத்தியகைலாஷ் சந்திப்பிலிருந்து டைடல் பார்க் சந்திப்பு வரையிலான மேம்பால கட்டுமான பணிக்காக அச்சாலையின் அகலம் குறைக்கப்ப ட்டுள்ளது. இதன் காரணமாக காலை நேரங்களில் ராஜீவ் காந்தி சாலையில் போக்குவரத்து நெரிசல் நிலவுகிறது. எனவே, காலை நேரங்களில் 8.30 மணி முதல் 11.00 மணி வரை போக்குவரத்து நெரிசலை குறைக்க, பின்வரும் போக்குவரத்து மாற்றம் செய்யப்படுகிறது. தற்போதுள்ள போக்குவரத்து பாதைக்கு கூடுதலாக, மத்திய கைலாஷ் சந்திப்பிலிருந்து டைடல் பூங்கா நோக்கி செல்லும் வாகனங்கள், "எதிர் பாதையின்" ஒரு பகுதி சாலையில் வி.எச்.எஸ். ஆஸ்பத்திரிக்கு அருகிலுள்ள யுடர்ன் வரை சுமார் 300 மீட்டர் தூரம் செல்ல அனுமதிக்கப்படும். இந்த போக்குவரத்து ஏற்பாடு நாளை மறுநாள் முதல் செயல்படுத்தப்படும். வாகன ஓட்டிகள் ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

தினகனி

Namadhu dhina kani daily morning newspaper
Press register general of India
PRGI NO TNTAM/2023/88253

1.8.2025

# சென்னையில் வளர்ப்பு நாய்களை சாலையில் விட்டுசென்றால் அபராதம் மேயர் பிரியா எச்சரிக்கை



சென்னை, ஆக. 1

சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டிட அலுவலககூட்டரங்கில்நேற்று, ஜூலை மாதத்திற்கான மாதாந்திர மன்றக்கூட்டம் மேயர் பிரியா தலைமையில் நடந்தது. கூட்டத்துக்கு, துணை மேயர் மகேஷ்குமார், கமிஷனர் குமரகுருபரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அப்போது, நேரமில்லா நேரத்தின்போது பேசிய 139வது வார்டு கவுன்சிலர் சுப்பிரமணி (ம.தி.மு.க.), "சென்னையில் வீட்டில் நாய் வளர்ப்பவர்கள் ஆரம்பத்தில் அதை நன்றாக பராமரிக்கிறார்கள். சிறிது நாட்கள் கழித்து பராமரிக்க முடியாமல் சாலையில் விட்டுவிட்டு சென்றுவிடுகிறார்கள். இதனால், பொதுமக்கள் பெருமளவில் பாதிக்கப்படுகிறார்கள். இதுபோன்ற செயல்களை தடுக்க கடும் நடவடிக்கை அவசியம்" என்று தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்த மேயர் பிரியா, "சென்னையில் உள்ள தெரு நாய்கள் மற்றும் வளர்ப்பு நாய்களுக்கு 'சிப்' பொருத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் வளர்ப்பு நாய்கள் அதற்கான பிரத்யேக செயலி மூலம் கண்காணிக்கப்படுகிறது. உரிமையாளர்கள் தன்னுடைய நாயை சாலையில் விட்டு செல்வது கண்டறியப்படும்போது அவர்களுக்கு அபராதம் விதித்து நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், மண்டலம் வாரியாக கால்நடை சிகிச்சை மையங்கள் ஏற்படுத்தப்படும்" என்று தெரிவித்தார்.

# சாதிய ஆணவ படுகொலைகள் தொடராமலிருக்க தனிச் சட்டம் இயற்ற வேண்டும் முத்தரசன்



சென்னை ஆக. 1

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

தூத்துக்குடி இளைஞர் கவின் படுகொலையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வன்மையாக கண்டிக்கிறது. தூத்துக்குடி இளைஞர் கவின் சாதி ஆணவ படுகொலை செய்யப்பட்டு உயிரிழந்திருப்பது கடும் அதிர்ச்சி அளிக்கிறது. இப்படுகொலையை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநிலக்குழு வன்மையாக கண்டிப்பதோடு, சாதி ஆணவ படுகொலையில் ஈடுபட்டவர்களை நீதியின்முன் நிறுத்தி கடும் தண்டனை வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறது.

படுகொலை செய்யப்பட்ட கவின் சென்னை ஐ.டி. துறையில் பணியாற்றி வருபவர். இவர் திருநெல்வேலி சித்தமருத்துவர் சுபாஷினியை நேசித்துள்ளார். இருவரும் மனம் இசைந்து திருமணம் செய்ய முடிவு செய்துள்ளனர். இதனை ஏற்காத சாதிய ஆதிக்க சக்திகள் 27.07.2025 அன்று கவினை வெட்டி படுகொலை செய்துள்ளனர்.

இன்றைய தொழில் நுட்ப உலகில் கல்வியும், அறிவும் வளர்ந்தோங்கும் சூழலில் இது போன்ற படுகொலைகள் சமூக நல்லிணக்கத்தை சிதைக்கிறது. சமத்துவச் சிந்தனைகளை தடுக்கிறது. சமூக பதற்றத்தை அதிகரிக்க செய்கிறது. இது தமிழ் சமூகத்திற்கு பேராபத்தாகும். சாதிய ஆணவ படுகொலைகள் தொடராமலிருக்க தனிச் சட்டம் இயற்ற தமிழக அரசு முன்வர வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக்குழு கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# யோகா மற்றும் இயற்கை மருத்துவ பட்டப் படிப்புக்கான மாணவர் சேர்க்கை கால அவகாசம் நீட்டிப்பு

சென்னை, ஆக. 1

20252026ம் கல்வியாண்டிற்கான பி.என்.ஓய்.எஸ். (யோகா மற்றும் இயற்கை மருத்துவம்) மருத்துவ பட்டப் படிப்புக்கான மாணவர் சேர்க்கைக்கு கால அவகாசம் நீட்டிக்கப்படுவதாக இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி ஆனணயரகம் தெரிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;

"20252026ம் கல்வியாண்டில் அரசு மற்றும் சுயநிதி யோகா மற்றும் இயற்கை மருத்துவக் கல்லூரிகளில் உள்ள அரசு ஒதுக்கீட்டு இடங்கள் மற்றும் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கான பி.என்.ஓய்.எஸ். (யோகா மற்றும் இயற்கை மருத்துவம்) பட்டப் படிப்பு சேர்க்கைக்கான இணையவழி விண்ணப்பங்கள் (Online Applications) தனித்தனியாக தகுதியுள்ளவர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன. பி.என்.ஓய்.எஸ். பட்டபடிப்புக்கான (தகவல் தொகுப்பேட்டினை, www.tnhealth.tn.gov.in, www.tnayushselection.org என்ற வலைதளங்களில் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

இணையவழியில் மட்டுமே (Online Applications) விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். வேறு எந்த வழியிலும் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கத் தேவையான தகுதிகள், விண்ணப்பக் கட்டணம் மற்றும் பிற கட்டண விவரங்கள், கலந்தாய்விற்கான அட்டவணை மற்றும் பிற தகவல்களினை www.tnhealth.tn.gov.in, www.tnayushselection.org என்ற வலைதளங்களில் உள்ள உரிய தகவல் தொகுப்பேட்டில் அறியலாம்.

விண்ணப்பிக்கும்முன் தகவல் தொகுப்பேட்டினை முழுமையாகப் படித்து சரியான தகவல்களைப் பதிவேற்றவும் மற்றும் தேவையான இடங்களில் அனைத்து அசல் சான்றிதழ்களின் PDF/JPEG வடிவில் பதிவேற்றவும். விண்ணப்பக் கட்டணம், இணையவழி கலந்தாய்வுக் கட்டணம், கல்விக் கட்டண முன்பணம் இவை அனைத்தும் இணையவழி மூலமாக மட்டுமே செலுத்தவேண்டும்.

அரசு சிறப்பு ஒதுக்கீட்டின்கீழ் விண்ணப்பிக்க விருப்பமுள்ளவர்கள் மட்டும், இணையவழியில் விண்ணப்பித்த பிறகு அந்த விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து, கோரப்பட்டுள்ள அனைத்துச் சான்றிதழ்களின் சுய சான்றொப்பமிட்ட நகல்களையும் இணைத்து செயலாளர், தேர்வுக்குழு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறை ஆணையர் அலுவலகம், அறிஞர் அண்ணா அரசினர் இந்திய மருத்துவமனைவளாகம், அரும்பாக்கம், சென்னை 600106 என்ற முகவரிக்கு 08.08.2025 மாலை 5.00 மணிக்குள் சமர்ப்பித்தல் / வந்து சேர வேண்டும்.

அறிவிக்கை நாள்: 17.07.2025 தகவல் தொகுப்பேட்டினைப் பதிவிறக்கம் செய்ய துவங்கும் நாள்: 17.07.2025 முதல்இ ணையவழி விண்ணப்பம் பதிவு செய்ய துவங்கும் நாள்: 17.07.2025 முதல்த கவல் தொகுப்பேட்டினைப் பதிவிறக்கம் செய்ய நீட்டிக்கப்பட்ட கடைசி நாள்: 08.08.2025 மாலை 5.00 மணி வரை இணையவழி விண்ணப்பம் பதிவு செய்ய நீட்டிக்கப்பட்ட கடைசி நாள்: 08.08.2025 மாலை 5.00 மணி வரை அரசு சிறப்பு ஒதுக்கீட்டின்கீழ் விண்ணப்பிக்க இணையவழி விண்ணப்பத்துடன் அனைத்து சுய சான்றொப்பமிட்ட சான்றிதழ்களுடன் தபால் / கூரியர் சேவை வாயிலாக சமர்ப்பிக்கவோ அல்லது நேரில் சமர்ப்பிக்கவோ நீட்டிக்கப்பட்ட கடைசி நாள்: 08.08.2025 மாலை 5.00 மணி வரை

பி.என்.ஓய்.எஸ். பட்டப்படிப்பு கலந்தாய்வு குறித்த விரிவான விவரங்களுக்கு உரிய தகவல் தொகுப்பேட்டினைப் பார்க்கவும்."

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் (1.8.2025)




நல்ல செய்தி கேட்க வாய்ப்பு உள்ளது. கடன் சுமை குறையும். பயணங்களில் லாபம் உண்டு.




வீட்டிலே மகிழ்ச்சி சூழ்நிலை. தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும்.




இன்றைய நாள் சவாலானது. பணி தொடர்பான மாற்றங்கள் ஏற்படலாம். நிதி மேலாண்மை அவசியம்.




புதிய முயற்சிகள் வெற்றி தரும். உறவினர்களுடன் ஒத்துழைப்பு அதிகரிக்கும். சோர்வு உண்டாகலாம்.




உதவிக்கரம் நீட்டும் நாள். பழைய கடன் தீரும். நண்பர்கள் உதவியாளர்களாக இருப்பார்கள்.




நல்ல வரவேற்பு கிடைக்கும். தொழிலில் முன்னேற்றம். மனதில் உள்ள சந்தேகங்கள் அகலும்.




முன்னோர்களின் ஆசீர்வாதம் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி. பணவாய்ப்புகள் அதிகம்.




மன அழுத்தம் அதிகம். ஆரோக்கியத்தில்கவனம்தேவை. தொழிலில் தாமதம் ஏற்படலாம்.




தயாரிப்புகளில் லாபம். தொழில் வளர்ச்சி தெரியும். உறவினர்கள் ஊக்கம் தருவார்கள்.




மனநிலை புத்துணர்ச்சி பெறும். திட்டமிட்டு செயல்பட நல்ல நாள். குடும்ப உறுப்பினர்களுடன் நேரம் செலவிடுவீர்கள்.




இரண்டு வேலையின் பயனும் கிடைக்கும். செல்வாக்கு உயரும். புதிய தொடக்கத்திற்கு நல்ல நாள்.




அமைதியான நாள். தொழிலில் பழைய பிரச்சனைக்கு தீர்வு. பண வரத்து திருப்திகரமாக இருக்கும்.

# பறக்கும் ரெயில் நிறுவனம் மெட்ரோவுடன் எப்போது இணைக்கப்படும்? நாடாளுமன்றத்தில் கனிமொழி கேள்வி

ன்னை, ஆக 1

பறக்கும் ரெயில் நிறுவனம் மெட்ரோவுடன் எப்போது இணைக்கப்படும்? என நாடாளுமன்றத்தில் கனிமொழி எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார். இது தொடர்பாக கனிமொழி எம்.பி. பேசியதாவது,

சென்னை மாஸ் ரேபிட் டிரான்சிட் சிஸ்டம் எனப்படும் சென்னை பறக்கும் ரெயில் திட்டத்தின் செயல்பாடு மற்றும் நிர்வாகத்தை இந்திய ரெயில்வேயிடமிருந்து, சென்னை மெட்ரோ ரெயில் லிமிடெட்க்கு மாற்றுவதற்கு அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா? அப்படியானால், அதன்விவரங்கள்என்ன?.

இந்த எம்.ஆர்.டி.எஸ். நெட்வொர்க்கை மெட்ரோ ரெயில்க்கு முழுமையாக மாற்றுவதற்கான எதிர்பார்க்கப்படும் காலக்கெடு என்ன? இந்த ஒருங்கிணைப்பின் மூலம் ரெயில் பயணிகளுக்கு கிடைக்கும் நன்மைகள் என்ன?. இவ்வாறு அவர் பேசினார்.


# தபால் நிலையங்களில் ஆகஸ்டு 2ந் தேதி சேவைகள் ரத்து

சென்னை, ஆக. 1

தென் சென்னை கோட்டம் முதுநிலை அஞ்சலக கண்காணிப்பாளர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: தபால் துறையின் புதிய மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் 2.0 வருகிற ஆகஸ்டு 4ந் தேதி முதல் சென்னை நகர தெற்கு கோட்டத்தில் உள்ள தபால் நிலையங்களில் புதிதாக செயல்படுத்ததிட்டமிடப்பட்டுள்ளது. இந்த மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் சேவையை தடையற்ற மற்றும் பாதுகாப்பான முறையில் செயல்படுத்த ஆகஸ்டு 2ந் தேதி பரிவர்த்தனைகள் நடைபெறா நாளாக திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, ஆகஸ்டு 2ந் தேதி தென் சென்னை கோட்டத்திற்கு உட்பட்ட தபால் நிலையங்களில் எந்த ஒரு தபால் சேவையும் மேற்கொள்ளப்படாது. எனவே, பொதுமக்கள் இந்த சேவை இல்லாத நாளை கணக்கில் கொண்டு, தங்களின் தபால் சேவைகளை முன்கூட்டியே திட்டமிட்டு பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சல்மான்கான் மீதான மான் வேட்டை வழக்கு மீண்டும் விசாரணை




பிரபல இந்தி நட்சத்திரங்களான சல்மான் கான், சைப் அலிகான், நடிகைகள் தபு, சோனாலி பிந்த்ரே, நீலம் ஆகியோர் 1998ம் ஆண்டு ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரில் நடந்த ஹம் சாத் சாத் ஹே என்ற இந்தி பட ஷூட்டிங்கில் கலந்துகொண்டனர். அப்போது அங்குள்ள காட்டில் வேட்டைக் குச் சென்றதாகவும், இதில் அரிய வகை 'சிங்காரா' மான்களை நடிகர் சல்மான்கான் வேட்டையாடியதாகவும் புகார் எழுந்தது. இதையடுத்து அவர் உட்பட 7 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது.சல்மான் கான் மீது வனவிலங்கு தடுப்பு, ஆயுதங்கள் தடை சட்டம் உள்ளிட்ட மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, அந்த வழக்குகளின் விசாரணை ஜோத்பூர் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்றது.

இந்த வழக்கில் சல்மான் கானை குற்றவாளி என ஜோத்பூர் நீதிமன்றம் அறிவித்தது. வழக்கில் இருந்து சைப் அலிகான், தபு, சோனாலி உட்பட 5 பேரையும் நீதிமன்றம் விடுவித்தது. நீதிமன்றம், சல்மான் கானுக்கு 5 ஆண்டுகள் சிறைத்தண்டனையும், பத்தாயிரம் ரூபாய் அபராதமும் விதித்தது. இரண்டு நாட்கள் சிறைவாசம் அனுபவித்த சல்மான்கானுக்கு ஜோத்பூர் நீதிமன்றம் ஜாமீன் வழங்கியது. இந்த தீர்ப்பை எதிர்த்து சல்மான் கான் தரப்பிலிருந்து ராஜஸ்தான் உயர் நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. இதேபோல, ராஜஸ்தான் அரசு தரப்பிலிருந்தும் மனுதாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில், பல ஆண்டுகள் கழித்து வரும் செப்டம்பர் 22ஆம் தேதி மான் வேட்டை வழக்கு ராஜஸ்தான் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வர உள்ளது.

சல்மான் கானுக்கு மாபியா கும்பலான லாரன்ஸ் பிஷ்னோய் கும்பலிடமிருந்து கொலை அச்சுறுத்தல்கள் வருவதாகக் கூறி, ஒய்பிளஸ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

# காலேஜ் படிக்கும்போது சீனியர்கள் மீது ஒரு கிரஷ் இருந்தது: நடிகை தேஜூ அஸ்வினி




'என்னசொல்லபோகிறாய்'என்றபடத்தின்மூலம்கதாநாயகியாகதமிழ்சினிமாவுக்குள் நுழைந்தவர், தேஜூ அஸ்வினி. ஜி.வி.பிரகாஷ் ஜோடியாக 'பிளாக்மெயில்' படத்தில் இவர்நடித்துள்ளார். நடிகை தேஜூ அஸ்வினி அளித்த பேட்டியில் பல்வேறு விஷயங்கள் குறித்து ஓபனாக பேசியுள்ளார். தேஜூ அஸ்வினி பேட்டியில் கூறியதாவது:

சினிமாவுக்கு நான் வந்தது எதிர்பாராதது. நண்பர்கள் மூலமாக யூடியூப்பில் ஒரு குறும்படம் நடித்தேன். அதில் கிடைத்த வரவேற்பு, என்னை சினிமாவுக்கு அழைத்துவந்துவிட்டது. நான் ரொம்ப ஜாலியான ஆள். துறுதுறுவென இருப்பேன். சும்மா இருக்கவே எனக்கு பிடிக்காது. என் அருகில் உள்ளவர்களை ஓய்வு எடுக்கவே விடமாட்டேன். நான் ஓயாத அலை போன்றவள். என்னை தடுக்க யாராலும் முடியாது.

படிக்கும் காலத்திலேயே என் அக்கா காதல் வசப்பட்டுவிட்டாள். இதனால் 'ஒருத்தியை தான் விட்டுவிட்டோம். உன்னையும் விட்டுவிட மாட்டோம்' என பெற்றோர் மிகவும் கண்டிப்புடன் வளர்த்தனர். பள்ளி வீடு, கல்லூரி வீடு. இதுமட்டும் தான் வாழ்க்கையாக இருந்தது. அதனால் காதலுக்கு வாய்ப்பில்லாமல் போய் விட்டது பாஸ்... கல்லூரியில் படிக்கும்போது சீனியர்கள் மீது ஒரு கிரஷ் (ஈர்ப்பு) இருந்தது. மற்றபடி எதுவும் நடக்கவில்லை.

'பேமிலிமேன்' படத்தில் வரும் சமந்தா போல ஆக்‌ஷன் கதாபாத்திரங்களில் நடிக்க விரும்புகிறேன். என்னை பொறுத்தவரை கதைக்கு அவசியம் என்றால், அது முக்கியத்துவம் வாய்ந்த காட்சி என்றால் முத்தக்காட்சி, நெருக்கமான காட்சிகளில் நடிப்பேன்" என்றார்.

# சானியா மிர்சாவின் வாழ்க்கை வரலாற்று படத்தில் நடிக்கப்போவது யார்?



பிரபல டென்னிஸ் வீராங்கனையான சானியா மிர்சா பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் சோயிப் மாலிக்கை காதலித்து திருமணம் செய்தார். நன்றாக போய்க் கொண்டிருந்த 15 வருட திருமண வாழ்க்கை கருத்துவேறுபாடுகாரணமாகமுடிவுக்குவந்தது. இதைத்தொடர்ந்து சோயிப் மாலிக், பாகிஸ்தான் நடிகை ஜனாவை மணந்தார்.

இந்நிலையில் சானியா மிர்சா வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டுசினிமாபடம்உருவாகஇருக்கிறது. 2019ம்ஆண்டிலேயே இந்த அறிவிப்பு வெளியான நிலையில் அந்தத் திட்டம் செயலுக்கு வராமல் இருந்தது.

அவரது கதாபாத்திரத்தில் நடிப்பதற்கு தீபிகா படுகோனே, பரினிதி சோப்ரா ஆகியோரை சானியா மிர்சா பரிந்துரைத்திருந்தார். தனது வாழ்க்கை வரலாறு படமாவது குறித்து சானியா மிர்சா சமீபத்தில் அளித்த பேட்டியில், "என் வாழ்க்கை வரலாறு படத்தில் அக்‌ஷய் குமார் நடித்தால் நன்றாக இருக்கும். நான் அவரது தீவிர ரசிகை. என் வாழ்க்கை வரலாற்றில் அக்‌ஷய் குமார் நடித்தால் அவரை காதலிப்பதற்கு தயாராக இருக்கிறேன்" என்று நகைச்சுவையோடு சானியா மிர்சா கூறினார்.

# 5வது டெஸ்ட்: இந்திய அணியின் பிளேயிங் லெவனை தேர்வு செய்த வாசிம் ஜாபர்




இங்கிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய கிரிக்கெட் அணி 'ஆண்டர்சன் தெண்டுல்கர்' கோப்பைக்கான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதில் முதலாவது மற்றும் 3வது டெஸ்டில் இங்கிலாந்து வெற்றி பெற்றது. பர்மிங்காமில் நடந்த 2வது டெஸ்டில் இந்தியா 336 ரன்கள் வித்தியாசத்தில் வாகை சூடியது. 4வது டெஸ்ட் 'டிரா' ஆனது. இதனால் தொடரில் இங்கிலாந்து 21 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கிறது.

இதனையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 5வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவலில் இன்று (வியாழக்கிழமை) தொடங்குகிறது. இதையொட்டி இரு அணி வீரர்களும் இரு தினங்களாக தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர்.

இந்த டெஸ்டுக்கான இந்திய அணியில் சில மாற்றங்கள் செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. பந்து தாக்கி கால்பாதத்தில் எலும்பு முறிவுக்குள்ளான விக்கெட் கீப்பர் ரிஷப் பண்ட் விலகி விட்டார். இதே போல் 'நம்பர் ஒன்' வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ராவுக்கு பணிச்சுமையை கருத்தில் கொண்டு ஓய்வு கொடுக்கும்படி கிரிக்கெட் வாரியத்தின் மருத்துவ கமிட்டி அறிவுறுத்தியுள்ளது. அதேபோல் ஆல்ரவுண்டர் ஷர்துல் தாக்குருக்கு பதிலாக சுழற்பந்து வீச்சாளர் குல்தீப் யாதவை சேர்ப்பது குறித்தும் அணி நிர்வாகம் பரிசீலிக்கிறது.

இந்நிலையில் இந்த போட்டிக்கான தான் தேர்வு செய்த இந்திய அணியின் பிளேயிங் லெவனை முன்னாள் வீரர் வாசிம் ஜாபர் அறிவித்துள்ளார். அவரது அணியில் ஷர்துக் தாக்குருக்கு பதிலாக குல்தீப் யாதவையும், அன்ஷுல் கம்போஜுக்கு பதிலாக அர்ஷ்தீப் சிங்கையும், பும்ராவுக்கு பதிலாக ஆகாஷ் தீப்பையும் தேர்வு செய்துள்ளார்.

வாசிம் ஜாபர் தேர்வு செய்த இந்திய பிளேயிங் லெவன் பின்வருமாறு:

1. யஷஸ்வி ஜெய்ஸ்வால் 2. கே.எல். ராகுல் 3. சாய் சுதர்சன் 4. சுப்மன் கில் (கேப்டன்) 5. ஜூரல் 6. ஜடேஜா 7. வாஷிங்டன் 8. குல்தீப் 9. சிராஜ் 10. அர்ஷ்தீப் 11. ஆகாஷ்தப்

# இன்னும் 89 ரன்கள்... டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் புதிய சாதனை படைக்க கில்லுக்கு வாய்ப்பு




இந்தியா இங்கிலாந்து மோதும் 5வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி லண்டன் ஓவலில் இன்று தொடங்குகிறது. இதில் இந்திய அணி வெற்றி பெற்று தொடரை சமன் செய்யுமா? என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது. இன்றைய போட்டியில் பல்வேறு சாதனைகளை தன்வசமாக்கும் வாய்ப்பு இந்தியகேப்டன்சுப்மன்கில்லுக்குகிடைத்துள்ளது.

சுப்மன் கில் இந்த தொடரில் இதுவரை 4 சதம் உள்பட 722 ரன்கள் குவித்துள்ளார். அவர் இன்னும் 53 ரன்கள் எடுத்தால், ஒரு தொடரில் அதிக ரன்கள் எடுத்த இந்தியர் என்ற சாதனையை சுனில் கவாஸ்கரிடம் இருந்து (1971ம் ஆண்டு வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான தொடரில் 774 ரன்) தட்டிப்பறிப்பார்.

89 ரன்கள் எடுத்தால் டெஸ்ட் தொடர் ஒன்றில் அதிக ரன்கள் குவித்த கேப்டன் என்ற சாதனை பட்டியலில் முதலிடத்தில் உள்ள ஆஸ்திரேலியாவின் டான் பிராட்மேனை (193637ம் ஆண்டு இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் 810 ரன்) முந்துவார். சதம் விளாசினால், ஒரு தொடரில் அதிக சதங்கள் நொறுக்கிய கேப்டன் என்ற சாதனையையும் வசப்படுத்துவார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.